

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.2.2026) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் (16–வது பேரவை) எட்டாவது கூட்டத்தொடர் நிறைவடைந்ததையொட்டி செய்தியாளர்கள் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.2.2026) தலைமைச் செயலகத்தில், 34 ஆண்டுகளுக்கு பிறகு திருத்தியமைக்கப்பட்ட, தமிழ்நாடு வரவு–செலவுத் திட்டத் தயாரிப்பு வழிகாட்டுதல் கையேட்டினை (The Tamil Nadu Budget Manual) வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன், முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. உமாநாத், நிதித்துறை இணைச் செயலாளர் பிரத்திக் தாயள், துணை செயலாளர் சி.ஏ. ரிஷப், ஆகியோர் உடனிருந்தனர்.






கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.2.2026) சென்னை, நந்தனத்தில், கழக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் மற்றும் சமூக வளைத்தன தன்னார்வலர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில், "ஆடுகளம் ஒரே தலைவன்" என்ற செயலியை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், முனைவர் டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், கழகத் தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் மகேந்திரன், தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்கள் கவிஞர் மனுஷ்யபுத்திரன் மற்றும் லெனின், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர்கள், சென்னை தெற்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன், செய்தி தொடர்பு துணைச் செயலாளர்கள் சூர்யா கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஹபிசுல்லா, திராவிடர் கழக துணை பொதுச் செயலாளர் செல்வி மதிவதனி, மூத்த ஊடகவியலாளர் செந்தில் வேல் தலைமைக் கழக நிர்வாகிகள் தகவல் தொழில்நுட்ப அணியின் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட பதினொன்று அரசு பள்ளிகளுக்கு, சமூக பொறுப்பு நிதியின் மூலம் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் விதத்தில் **Smart Class** உபகரணங்களை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வழங்கினார்.

### நம் உயிர் நிகர்

# தமிழ்மொழியைச் செழிப்போடு வாழவைக்க வேண்டியது; உலகெங்கும் வாழும் அனைத்துத் தமிழர்களின் பொறுப்பு!

## உலகத் தாய்மொழி நாளையொட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, பிப். 22 -**

**உலகத் தாய்மொழி நாளை யொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலை தளப் பதிவில் "நம் உயிர் நிகர் தமிழ் மொழியைச் செழிப்போடு வாழ வைக்க வேண்டியது உலகெங்கும் வாழும் அனைத்துத் தமிழர்களின் பொறுப்பு!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

தமிழே நீ வாழ்ந்திடு!

இன்று உலகத் தாய்மொழிகள் நாள்! "ஏராளமானோர் உயிர் கொடுத்துக் காத்த நம் உயிர்நிகர் தமிழ்மொழியை எத்தனை சிறப்புகள் சொல்லி அழைத்தாலும் "தமிழே" என்று அழைத்திடும்போது கிடைத் திடும் இன்பம் மகத்தானது."

தலைவர் கலைஞரின் இந்த வரிகளைப் பாடலாக்கிய அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். அவர்களுக்கு என் நன்றி!

நம் தமிழைக் காத்து - அதை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கொண்டு சேர்த்து, செழிப்போடு வாழவைக்க வேண்டியது உலகெங்கும் வாழும் அனைத்துத் தமிழர்களின் பொறுப்பு!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### சட்டப்பேரவையில் இருந்து பா.ஜ.க.வினர்

# அரசியல் நாடகத்தை நடத்தி வெளிநடப்பு செய்திருக்கின்றனர்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

**தூத்துக்குடி, பிப்.22 -**

**சட்டப்பேரவையிலிருந்து பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் வெளிநடப்பு செய்தது குறித்த கேள்விக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அரசியல் நாடகத்தை நடத்தி வெளிநடப்பு செய்திருக்கின்றார் என்று குறிப்பிட்டார்.**



*தூத்துக்குடி விமான நிலையத்தில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்து அளித்த பேட்டி வருமாறு :-*

*இடைக்கால பட்ஜெட்டில் எதிர்காலத் திட்டங்கள் எதுவுமில்லை எனக் கூறி பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் சட்டமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்தது குறித்த கேள்விக்கு, பொதுவாக இடைக்கால பட்ஜெட்டில் பெரிய அறிவிப்புகளும் வருவதில்லை. இருப்பினும், அவர் அதை முறையாகப் படித்துப் பார்த்தால், இளைஞர்களின் எதிர்காலத் தேவைகள், விளையாட்டு துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்குத் தேவையான முக்கிய அம்சங்கள் அதில் இடம்பெற்றுள்ளன. வெளிநடப்பு செய்ய வேண்டும் என்ற நோக்கில் ஏதாவது ஒரு அரசியல் நாடகத்தை அரங்கேற்றுவது சரியானதாக இருக்காது.*

*தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியில் பிளவு ஏற்பட்டுள்ளதாக பாஜக கூறி வருவது குறித்த கேள்விக்கு, பாஜக தனது கூட்டணியைச் சரியாக வைத்துக் கொண்டாலே போதும்; அவர்கள் ஏன் மற்ற கூட்டணிகளைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள் எனத் தெரியவில்லை. திமுக - காங்கிரஸ் கூட்டணி பல ஆண்டுகளாக பலமாக நிலைத்திரு க்கும் ஒரு கூட்டணி. இதில் எந்தவித மாற்றமும் வருவதற்கு வாய்ப்பே இல்லை.*

*மாநிலத்தையே கொண்டு போய் அடகு வைத்தவர் தான் எதிர்க்கட்சித் தலைவர். இன்னைக்கு நேற்று அல்ல; திமுகவின் அடிப்படை கொள்கையே 'மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி' என்பதே. ஒருவேளை அவருக்கு இது தெரியாமல் இருக்கலாம் என்று விமர்சித்தார்.*

### மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை!

# கீரனூரில் - "தமிழ்நாடு தலைகுனியாது' மாபெரும் பொதுக்கூட்டம்!

## ஏ.கே.எஸ். விஜயன் - அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கவிச்சுடர் கவிதைப்பித்தன் சிறப்புரை!

புதுக்கோட்டை. பிப். 22 –

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக கந்தர்வகோட்டை சட்டமன்ற தொகுதி சார்பில் "தமிழ்நாடு தலைகுனியாது' மாபெரும் பொதுக்கூட்டம் இன்று ( 22.02 2026 – ஞாயிற்றுக் கிழமை) மாலை 6.00 மணியளவில் கலைஞர் திடம், அய்யப்பன் கோவில் அருகில், கீரனூரில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே. கே.செல்லபாண்டியன்தலைமையில் நடைபெறுகிறது. ஒன்றியச் செயலாளர்கள் என்.சேட்டு, குளவாய்ப்பட்டி சி.சண்முகம்ஆகியோர்வரவேற்புரையாற்றுகின்றனர்.கே.ஆர்.என்.போஸ், எம்.பரமசிவம்,வெ.முத்துகிருஷ்ணன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, மா.தமிழ் அய்யா,

ஆர்.சாமிநாதன், உமுருகேசன், த.செல்வம்,எஸ்.சின்னராஜ்,பாண்டிச் செல்விகே.ஆர்.என்.போஸ்,ஜெயமீரா ரவிக்குமார், சித்ரா ரவிச்சந்திரன், எம்.ஏ.எம்.

முகமதுஇம்தியாஸ்,ஆர்.செல்லத்துரை,மாலாஇராஜேந்திரதுரை,கீரை. அஸ்ரப் அலி, ஆ.வீரசிங்கம், ராஜராஜ சோழன், ஆ.ராஜேந்திர சோழன், டி. சூசைராஜ், பொன்.பாரிவள்ளல், எம். ராஜா, கா.இளவரசன், எம்.தவசுமணி, மு.கலைஞர் கருணாநிதி, க. வீரைய்யா, டி.முத்து, கே.ஆர்.பாலமுத்து, ஆர்.கரிகாலன், பி.முத்துக்குமார், ஆர்.சுருளிமுத்து, ஆர்.கே.தவமணி, எஸ்.ராஜா, வனிதா ஆறுமுகம், அழகு ராஜேந்திரன், வீரக்குடி ராஜ்குமார், எஸ்.மணிவேல், ஆரோக்கிய மேரி திவ்யநாதன், கிள்ளனூர் சின்னப்பா, வி.எஸ்.பழனி, முத்துராங்கியார், பி.சின்னத்துரை, ஆரோக்கியசாமி, சலீம்தீன், பி.எஸ்.சூசை, பி.சி.என்.கண்ணன்,எம்.குருமூர்த்தி, சி.கே.சின்னத்துரை, வழக்கறிஞர் மணிகண்டன், ஆரோக்கியசாமி, அம்பலவாணன், கேஇராமையா, நல்லையா, கருணாநிதி, மு.ரா.தமிழ்ச்செல்வன், சவரிமுத்து, ம.கோ. ரவிச்சந்திரன், எல். சௌந்தர்ராஜன், முகம்மதுஅதாவுல்லா,ஆர்.சவரிமுத்து ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். தமிழ்நாடு அரசு டெல்லி சிறப்பு பிரதிந்தி, கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் , புதுக்கோட்டைதெற்குமாவட்டகழகசெயலாளர் இயற்கை வளங்கள் துறை அமைச்சர். எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், கழக இலக்கிய அணி துணைத் தலைவர் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன்ஆகியோர்சிறப்புரையாற்றுகின்றனர். கந்தர்வக்கோட்டை தொகுதி பார்வையாளர் வழக்கறிஞர் மு.மணவழகன், திருவிடைமருதூர் தொகுதி பார்வையாளர் டாக்டர் சி. குறிஞ்சிவாணன்,தலைமைகழகபேச்சாளர் சொ.தமிழினியன், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, முன்னாள்சட்டப்பேரவை உறுப்பினர் பெரியண்ணன் அரசு, வை.முத்துராஜா எம்.எல்.ஏ, கார்த்திக் தொண்டைமான், மேயர் திலகவதி செந்தில், த.சந்திரசேகரன், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், பி.டி.அரசகுமார், அரு.வீரமணி, சுப.சரவணன், புதுகை விஜயா, வி.என்.மணி, எம்.எஸ். அசோக்பாண்டியன்,டாக்டர்எஸ்.ஆர். அண்ணாமலை துணை மேயர் எம். லியாகத்அலி, எஸ்.எஸ்,கருப்பையா, பெ.ராஜேஸ்வரி, க.மதியழகன், கீரை. தமிழ் ராஜா, சு.சண்முகம எம்.வேலுச்சாமி, மு.இளஞ்சேரன் முத்துச்சாமி, விளாப்பட்டி மற்றும் பலர் கலந்து கொண்டுசிறப்பிக்கின்றனர். முடிவில் ஓ.எஸ்.வெங்கடாச்சலம், பி.அண்ணாத்துரை ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.




# தி.மு.க.
# இளைஞர் அணி

## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, கோவை மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**22.02.2026 ஞாயிற்றுக்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10.00 மணி | நகராட்சி பேருந்து நிலையம் திறப்பு விழா | பொள்ளாச்சி, கோவை. |
| காலை 10.15 மணி | 'பொள்ளாச்சி நா.மகாலிங்கம்' சாலை திறப்பு விழா | திட்ட சாலை, பொள்ளாச்சி, கோவை. |
| காலை 10.30 மணி | பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழா | சர்க்கஸ் மைதானம் அருகில், பொள்ளாச்சி, கோவை. |
| காலை 11.15 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழா | அண்ணா குடியிருப்பு, உடுமலைப்பேட்டை, திருப்பூர். |
| காலை 11.45 மணி | திருப்பூர் தெற்கு மாவட்ட கழக அலுவலகம் திறப்பு விழா | பழநி சாலை, உடுமலைப்பேட்டை |
| மதியம் 12.00 மணி | குடிமங்கலம் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் திரு.கிரி அவர்களின் திருவுருவப்படம் திறப்பு விழா | திருப்பூர் தெற்கு மாவட்ட கழக அலுவலகம், பழநி சாலை, உடுமலைப்பேட்டை |
| காலை 12.15 மணி | கழக முன்னோடிகள் 1200 நபர்களுக்கு, பொற்கிழி வழங்கும் விழா | ஜி.வி.ஜி.கல்லூரி அருகில், பழநி சாலை, உடுமலைப்பேட்டை, திருப்பூர். |
| மதியம் 01.00 மணி | மடத்துக்குளம் ஒன்றிய முன்னாள் அவைத்தலைவர் திரு.வெங்கிடுசாமி அவர்களின் திருவுருவப்படம் திறப்பு விழா | மைவாடி, மடத்துக்குளம், திருப்பூர். |
| மதியம் 1.30 மணி | சூலூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பொன்முடி சாலை திறப்பு விழா | பஞ்சாயத்து அலுவலகம், சீரணி கலையரங்கம் அருகில், சூலூர், கோவை. |
| மாலை 4.00 மணி | மேற்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு | கணியூர் டோல்கேட், கருமத்தம்பட்டி, கோவை. |

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 21.02.2026

கலைஞர் 100 1924 - 2023

